# இந்தியாவின் முயற்சி புலிகளை பாதிக்காது

## யோகி கூறுகிறார்

(மணிலா)

இந்தியா புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப் போவதாக எழும்செய்தி தம்மை எந்தவகையிலும் பாதிக்காது என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி தெரிவித்ததாக

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 1 இதழ் 9?

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14 — 05 — 1992

## ஆனையிறவை தாக்க புலிகளுக்கு வசதியாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நிலவும் கடும் வரட்சியினால்ஆனையிறவு குடாக்கடல் வற்றிவிட்டதாகவும்மோதல்கள்நடைபெற்றால் புலிகளுக்கு இது வசதியாக இருக்குமென இராணுவ அதி

(4-ம் பக்கம் பார்க்க)

## சமாதானக் குழுவை முஸ்லிம் காங்கிரஸ் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை குறித்து அமைக்கப்பட்ட 'சமாதானக் குழு'வை

(4ம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி கிழக்கில் நேற்று திடீர் விமானத் தாக்குதல்

## - இருவர் படுகாயம் -

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் நேற்றுக்காலை திடீரென வந்த இரு பொம்மர்கள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். இரு வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. இதையடுத்து இப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.**

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

நேற்றுக்காலை 10 மணியளவில் வடமராட்சி கிழக்குப் பகுதியான மருதங்கேணி தாளையடி வைத்தியசாலைக் கருகில் இருபொம்மர்கள் பல தடவை வட்டமிட்டுகுண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

நான்கு குண்டுகளை வீசித் தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலில் இதே இடத்தைச் சேர்ந்த திருமதி திரவியம் இராஜேஸ்வரன் (வயது 40), அந்தோனி அன்ரன் (வயது 24) ஆகியோர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலை

[4ம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்குதல்

[வவுனியா]

செட்டிகுளம் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் வாழும் பகுதியை நோக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா பகுதியில் படை குவிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் இம்மாதமுடிவில் ஜனாதிபதி நடமாடும் செயலகம் நடைபெறவுள்ளதால் இப்பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது:

முக்கிய பகுதிகளில் வீதித் தடைகள் போடப்படுவதாகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 29ம் திகதி முதல் 31ம் திகதி வரையில் ஜனாதிபதி நடமாடும் செயலகம் இங்கு நடைபெறும். (சி)

## கொழும்பு பல்கலைகழகத்தில் 10 மாணவர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பத்து மாணவர்கள் தொடர்ச்சியாக 5-ம் நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

பல கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர் மேற்கொண்டுவரும் எதிர்ப்பின் ஒரு கட்டமாகவே இந்த உண்ணாவிரதம் நடைபெற்றுவருகிறது.

இதற்கிடையில் மாணவர் கோரிக்கையை நிர்வாகம் நிறைவேற்றுமெனவும், மூடப்பட்டுள்ள பல்கலைக்கழகம் மீண்டும் 18ம் திகதி திங்கட்

[4-ம் பக்கம் பார்க்க]

## குளங்களை புனரமைக்க போரூட் நிதி உதவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள குளங்களை புனரமைப்புச் செய்வதற்கு 'போரூட்' ஸ்தாபனம் பண உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதுசம்பந்தமாக கொழும்பிலிருந்து வந்த போரூட் ஸ்தாபன அதிகாரிகளுக்கும், யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்குமிடை

[4ம் பக்கம் பார்க்க]

## மங்களமுனசிங்கா இறுதி முயற்சி

(கொழும்பு)

தெரிவுக்குக்குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்கா சகல கட்சித் தலைவர்களுடனும் அவசரசந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

தெரிவுகுழுவின் முடிவு 19ம் திகதியில் வெளியிடப்படமுன் சில விடயங்களில் பொதுக் கருத்தொன்றை மேற்கொள்ளும் முகமாக இந்த இறுதி முயற்சியை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

இதற்கிடையில் தெரிவுக்குழுவின்முடிவு பிரச்னைக்கான தீர்வில் பெரும் நன்மையை ஏற்படுத்துமா என்பது பெரும் சந்தேகமே என அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## இலங்கைக்கு 100 டாக்டர்களை ஐ. நா. நிறுவனம் அனுப்பும்

(கொழும்பு)

இலங்கைக்கு விசேட தரம் பெற்ற நூறு டாக்டர்களை 'ஐக்கிய நாடுகள் கடல்கடந்த தொண்டர் ஸ்தாபனம்' அனுப்பிவைக்கவுள்ளது.

இலங்கையில் டாக்டர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று இவ்வாறு டாக்டர்களை அனுப்ப மேற்படி தொண்டர் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இலங்கையில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதே இதற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு வரும் டாக்டர்களுக்கு வருடாந்த சம்பளமாக12,000அமெரிக்கடொலர்களை மேற்படி தொண்டர் ஸ்தாபனம் வழங்கும். [கே-சி]

## பிரபாகரனை ஒப்படைப்பதில் இலங்கைக்கு சிரமம் இல்லை

(கொழும்பு)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் கைதுசெய்யப்பட்டால் இந்தியாவிடம் அவரை ஒப்படைப்பதில் இலங்கை அரசுக்கு சிரமம் ஏதும் இருக்காதென ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேசவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வது இந்தியாவைப் பொறுத்தவிடயம், புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்தியா இதுவரை கோரவில்லை என்றும் கூறினார். (க)

## இலங்கை அரசுக்கு இந்தியா பாராட்டு

[புதுடில்லி]

ராஜிவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் தலைவர் திரு பிரபாகரனையும் உளவுப் பிரிவுத்தலைவர் பொட்டு அம்மானையும் இந்தியாவிடம் ஒப்படைக்கும் விடயத்தில் இலங்கை அரசு பூரண ஒத்துழைப்பு நல்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவான கட்சிகளை தடைசெய்க

[புதுடில்லி]

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் தமிழக கட்சிகளை தடைசெய்யுமாறு இந்திய லோக்சபாவில்

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழக சபாநாயகருக்கு 8 மாநிலங்கள் ஆதரவு

(சென்னை)

தமிழக பத்திரிகையாளர்களுக்கு எதிராக சபாநாயகர் விடுத்த கைது வாரண்ட் உத்தரவை இடைநிறுத்தம் செய்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சேவை

தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி. உங்களுக்குத் தேவையான றபர் முத்திரைகளை (Rubber Stamp) விரும்பிய டிசைன்களில் செய்து கொள்ள இன்றே நாடுங்கள். சோதி அச்சகம், முதலாம் மாடி, 25, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. (ஏ–2135)

### வெளிவந்துவிட்டது

சமூகக்கல்வி ஆண்டு 7 துரித மீட்டலுக்கான வினாவிடை. ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு:– சோதி வெளியீட்டு வாரியம் ஏகவிநியோகஸ்தர்கள்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை 234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். விலை 20/- மட்டுமே. (சி–2121)

### சங்கீதம் வினாவிடை

தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா ஆண்டுகள் 6, 7, 8, 9 மற்றும் வட இலங்கைச் சங்கீத சபையின் தரம் 2 பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. வெளியிட்டோர்: நடுவுத்துருத்தி, நல்லூர்ச்சந்தை, கிடைக்குமிடம்: ஸ்ரீ காந்தா புத்தகசாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6285)

### வைத்திய சேவை

வியர்வைப் பருக்கள், முகப் பருக்கள், சதை வளர்ச்சி, தலைமயிர் வளர, கழலைக்கட்டி, தலைமயிர் நரை மாறுவதற்கு, வாதம், நரம்புத் தளர்ச்சி தேமல், வெண்குஷ்டம், மாதவிலக்குக் கோளாறுகள், செய்வினை, சூனியம், பிணிதோஷம் போன்ற வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். வேளாங்கண்ணி வைத்தியர், எம். கருணாதரன், வேளாங்கண்ணி வைத்தியசாலை, 616, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி6293)

### வரலாறு A/L

வரலாறு A/L பிரத்தியேக வகுப்புகள் மீட்டல் வகுப்புகளுக்குத் தொடர்பு கொள்ளவும். நா. மயில்வாகனம், B. A. Hons (Cey) History, 36, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-6297)

### ஆண்டு 9, 10

வரலாறு வினா—விடைகள் அரசாங்கப் புதிய பாடநூலுக்கமைய வெளிவந்துள்ளது. செயற்பாடுகளுக்கு விடைகள், மாதிரிப் பரீட்சை வினாத்தாள் விடைகள் யாவும் ஒருங்கேகொண்டது. ஆக்கம்; நா. மயில்வாகனம், சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். விலை ரூபா 27–50, விலை ரூபா 32/- எங்கும் கிடைக்கும். (சி–6296)

### கோழி தேவை

இறைச்சிக்கோழி நல்ல விலைக்குத் தேவை. கிலோ 100 முதல் 120 வரை வாங்கப்படும். ஹோட்டல் பரடைஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி–6299)

### G. C. E. A/L விலங்கியல்

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால மீட்டல் வினாவிடை (Paper Class) 1992 ஆரம்பம் 16–5–92 சனி காலை 9 மணி; 1993, 94 ஆண்டு தனிப்பட்ட வகுப்புகள். எஸ். செல்வநாயகம் B. Sc. (Cey) Dip. Ed. இணுவில் தெற்கு. (சி–6300)

### தேவை

எமது கல்வி நிறுவனத்தில் கடமையாற்ற ஆங்கில தட்டெழுத்து அனுபவத்துடன் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் பெண் லிகிதர் தேவை North Ceylon Technical Institute, 14, St Peter's Lane, Jaffna (எ-2140)


போஷாக்கு

## பால் உணவுத் திட்டம்

(உடுவில்)

சுதுமலை கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலைய சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குப் பாலுணவு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் ஆதரவுடன அண்மையில் நிலையச் செயலாளர் திரு. அ. ரவிநாதனால் இருபது பிள்ளைகளுக்கு போஷாக்குப் பாலுணவு வழங்கப்பட்டது. தொடர்ந்தும் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. (109)

## பல்கலைக்கழக ஊழியர் சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகஊழியர் சங்கத்தின் 16வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அன்றைய தினம் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. நீ. இரவீந்திரதாஸன், திரு. ச. இரத்தினசபாபதி, இணைச் செயலாளர்கள்: திரு.நீ. மயில்வாகனம், திரு, நா. தவராசா, பொருளாளர்: திரு, யோ, ஜெயக்குமார், உப பொருளாளர்: திரு. எஸ். ஸ்ரீகாந்தா, பத்திராதிபர்: திரு. நா. கணேசலிங்கம், பொதுநல உத்தியோகத்தர்: திரு. ஜெ. அ. அகஸ்ராஸ், கலைபடைப்பாட்டுப் பொறுப்பாளர்: திரு. க. சந்திரகுலசிங்கம், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்: திரு. து. பிறேம்குமார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூராட்சி சேவையை விஸ்தரிக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் சேவையைவிஸ்தரிக்கவும், மாவட்டத்தில் உள்ள பிரதேச சபை, ஆயுர்வேத வைத்திய சாலைகள் நல்ல முறையில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:

சனசமூகநிலையங்களுக்கு புத்தூக்கம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வட்டக்கச்சியில் ஆயுர்வேத மருந்து தயாரிப்பு நிலையம் ஒன்று நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (83)

## தராசு படிகளுக்கு முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

சழிபுரம் பிரதேச செயலகத்தில இப்பகுதிக்குட்பட்ட பாவனையாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் உதவும் முகமாக யாழ். செயலக நலுவை, அளவை திணைக்களம் சுழிபுரப்பகுதி வர்த்தகர்களின் தராசுகள், அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு இன்று 14–ம், 18–ம், 19–ம், 21–ம், 25-ம் திகதிகளிலும் காலை 8–30 மணி தொடக்கம் 1 மணிவரை ஐந்து தினங்கள் முத்திரையிடவுள்ளது. (154)

## விவசாயிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பரவலாக பெய்த மழை சிறுதானியங்களையும். பருப்பு வகைப் பயிர்களையும் நாட்டுவதற்குப் போதுமானது, புகையிலைபயிர் செய்த நிலங்களில் குரக்கன், சாமை, தினை போன்ற தானியங்களை நீர்ப்பாய்ச்சலுக்குக ஊற வெறறிகரமாகப் பயிர் செய்யலாம். வயல் நிலங்களில் எள்ளு, கம்ப, பயறு, சௌபி ஆகிய பயிர்களை மழைஈரம் காயும் முன்பே பயிர் செய்யும் படி தமிழ் ஆய்வு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

இவ்விதையினங்களை விவசாயிகள் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை தாவடியில உள்ள தமிழ் ஆய்வு நிறுவன விவசாய பிரிவு மேற்கொண்டுள்ளது.

## விளையாட்டு போட்டி

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மட்டத்திலான விளையாட்டுப்போட்டி இம்மாத இறுதியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்புகல்விக்கோட்ட பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேலு மேற்கொண்டுள்ளார், [72]

## தனிச்சிங்கள மொழியில் புதுவருட பஞ்சாங்கம்

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள சுதேச வைத்திய அமைச்சு கடந்த தமிழ் - சிங்கள புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு புது வருட பஞ்சாங்கம் மற்றும் பிரசுரங்களைத் தனிச் சிங்கள மொழியில் வெளியிட்டுள்ளது,

புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு இந்த அமைச்சு வடஇலங்கை சித்தஆயுர்வேத வைத்தியர்கள் சம்மேளனத்தின் அமைப்பாளர் டாக்டர், சுகந்தன் இன்னுசித்தம்பிக்கு கடந்த வாரம் தபாலில் அனுப்பி வைத்துள்ள பஞ்சாங்கம், கலண்டர் மற்றும் அமைச்சர் வி.ஜே.எம். லொக்குபண்டாரவின் புத்தாண்டு வாழ்த்து செய்தி ஆகிய அச்சிட்ட பிரசுரங்கள் யாவும் தனி சிங்கள மொழியில் மாத்திரமே இருக்கக்காணப்பட்டன.

தமிழ்மொழியிலும் இந்த பிரசுரங்கள் வெளியிடப்படாதது குறித்து டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி ஆட்சேபனை தெரிவித்து சுதேச வைத்திய அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். [72]

## வடமராட்சியில் இறால் வளர்ப்பு நிலையங்கள்

(கொழும்பு)

வடமராட்சி கிழக்கில் இறால் வளர்ப்புக்கென இரு இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணிச் சந்திக்கு அருகாமையிலுள்ள கடற்பகுதி (கடல் நீரேரி), குடத்தனை, பொற்பதி கடற்பகுதி ஆகிய இடங்களே தெரிவு செய்யப்பட்ட இடங்களாகும்.

இவ்விரு கடற்பகுதிகளிலும் இறால் வளர்ப்பு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (154)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வாத்தகர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இந்தியப்பெண் சாதனை

[புதுடில்லி]

இந்திய திபெத்திய எல்லைக் காவல்படையின் மற்றைய இரு வீரர்களுடன் செல்வி சந்தோஷ் யாடோ நேற்றுமுன்னம்எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்து சாதனை புரிந்துள்ளார்.

எவரெஸ்ற் சிகரத்தை எட்டிய இரண்டாவது இந்தியப்பெண் இவராவர். (கே)


கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான

### மாதிரி வினாவிடை நூல்

★ தமிழ் மொழி, பொது அறிவு, விவசாயம் ஆகிய மூன்று வினாத்தாள்களுக்குமான ஒரே நூல்.

★ திரு. க. குணராசாவின் வழிகாட்டலில் தயாரானது.

சொற்ப பிரதிகளே கொழும்பிலிருந்து வந்துள்ளன.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(எ-2139)

### இரசாயன நூல்

A/L (உயர்தரம்)

அடிப்படை இரசாயனம் பகுதி - I

ஆக்கியோன்: த. சத்தீஸ்வரன்

வெளிவந்துவிட்டது.

கிடைக்குமிடம்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, காங்கேசன்துறை விதி, யாழ்ப்பாணம்.

(எ-2141)

## திறப்பு விழா

### பாரதி ஆங்கில வைத்தியசாலை

நவாலி

எதிர்வரும் சனிக்கிழமை [16–05–92] மாலை 4 மணியளவில் நவாலி-ஆனைக்கோட்டை பிரதானவீதியில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையில் எமது சேவையை அளிக்கும் முகமாக மீண்டும் திறந்து வைக்க இருக்கிறோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நன்றி

டாக்டர் அ. மரியதாஸ்

(சி6303)

செஞ்சோலை சிறுவர் இல்ல வளர்ச்சிக்கான நிதி சேகரிப்பதற்காக

செஞ்சோலைக் குழந்தைளுடன் புகழ்பெற்ற கலைஞர்கள் இணைந்து வழங்கும்

### "சப்தஸ்வராவின்" இசைமாலை இன்னிசை நிகழ்ச்சி

யாழ். குடாநாடெங்கும்

விரைவில் நடாத்தப்பட இருக்கிறது

குழந்தைகளின் உணர்வுகளை எதிர்பார்ப்புகளை பிரதிபலிக்கும்

உணர்வுமிக்க இனிய புதிய பாடல்கள்

சமூக அவலங்களால் பராமரிப்பில்லாமல் தவித்த குழந்தைகளின் எதிர்கால நல் வாழ்விற்கு ஒளியூட்ட உங்கள் பங்களிப்பை செலுத்துங்கள். உங்கள் பங்களிப்பு மேலும பல குழந்தைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும.

பிரவேசம்; 10/-, 25/-, 50/-, 100/-, 500/-, 1000/-.

(சி 6305)

# சட்டமன்றத்தை விசாரிக்க நீதிமன்றுக்கு அதிகாரமில்லை

## சேடப்பட்டி முத்தையா

[சென்னை]

''இந்திய அரசியல்அமைப்பு விதிகளின்படி நாடாளுமன்றத்தையோ, சட்டமன்றத்தையோ எந்த நீதிமன்றமும் விசாரிக்க முடியாது.''

இவ்வாறு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா நேற்று சென்னையில் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றம் தமிழக சட்டப்பேரவைக் கிடையே பத்திரிகையாளர் கைது விடயமாக எழுந்த கருத்து தொடர்பாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்றங்கள், சட்டப் பேரவைகள் ஒன்றை ஒன்று மோதிக்கொள்ளக்கூடாது என்றும், இவைகளுக்கென இந்திய அரசியலமைப்பில் விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (கே)

## வெலிகந்த பகுதியிலிருந்து தமிழர் வெளியேற்றம்

[மட்டக்களப்பு]

வெலிகந்த, முத்துக்கல ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறிய தமிழ் மக்களுக்கு வாழைச்சேனையில் அகதிமுகாமொன்று அமைக்கப்படவுள்ளது.

கடந்தமாதம் 29ம் திகதி அப்பகுதியில் நிகழ்ந்த வன்செயலால் தமிழ்மக்கள் உடுத்த உடையுடன் காடுகள் வழியாக வாழைச்சேனைப் பகுதிக்கு வந்து தஞ்சமடைந்துள்ளனர்.

இப்பகுதியில் முஸ்லிம் ஊர்காவல்படையால் சுமார் 90 தமிழர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (கே)

## தமிழ் கட்சிகள் இணைப்பை வலியுறுத்தும்

[கொழும்பு]

அரசாங்கத்தால் முன் வைக்கப்படவிருக்கும் தமிழர் பிரச்னைக்கான தீர்வில். வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சித் திட்டம் அமைந்ததாக இருக்க வேண்டும் என கொழும்பில் ஏழு தமிழ்க்கட்சிகள் கூட்டாக தீர்மானித்துள்ளன.

இந் நோக்கத்தை அடைவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆராய இவர்கள் கொழும்பில் தவ போது கூடி ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் 19-ம் திகதி கூடும் போது தங்களது ஏகோபித்த நிலைப்பாட்டை தெரிவிக்கும் முகமாகவே இப்படிக் கூடி ஆராய்வதாக கூறப்படுகிறது. (டிக)

## ''இளம் சந்ததியை உணர்வுடன் வலுவாக உருவாக்க வேண்டும்''

[சாவகச்சேரி]

புதிய வலுவான தெளிவான வழிகாட்டல்களை சமகாலத்தில வருங்கால இளம் சமுதாயத்திற்கு ஊட்டவேண்டும். வலுவை வலுவேண்டி நிற்கின்றது. நாம் இன்று பல சிக்கல்கள் இன்னல்களை சந்தித்தாலும் இன்றைய கால கட்டத்தில் இப்படியான நிகழ்வை முன்னெடுத்து செல்கின்றோம்.

இவ்வாறு தென்மராட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பொறுப்பாளர் புரட்சி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

இப்போட்டி மேற்படி பாடசாலை அதிபர் கு. கதிர்காமசேகரர் தலைமையில்நடைபெற்றது.

அவர் மேலும் கூறியதாவது: வெறும் புத்தகப்படிப்பாக வாழப்பழகிவிட்ட நாம் இனி தனிக்கல்வியுடன் நிற்காமல் இளம்சந்ததியை உணர்வுடன் வலுவாக உருவாக்க வேண்டும். சிறுர்களின் ஒவ்வொரு உணர்வும சமாதானத்துடன் இணைந்தது. இவர்களுடைய அசைவுகள் துப்பாக்கியோடு இணைந்துள்ளது. இவர்கள் இசைக்கும் ஒவ்வொரு சொற்களும் இனிமையானது. இளம் சிறுர்களுக்கு நீங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அழுத்தங்களை பிரயோகியாதீர்கள் அவர்களுக்கு வலுவை. உணர்வை ஊட்டிவளருங்கள். நாம் இனி உறுதியான சமகால மாற்றத்துடன் வலுவான தெளிவான வழிகாட்டலை உருவாக்குவோம் என்றார். [155]

## விதை வெங்காயம் உற்பத்திசெய்ய ஏற்பாடு

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரிய வெங்காயச் செய்கைக்குத்தேவையான விதைவெங்காயத்தை உற்பத்திசெய்ய விவசாயத்திணைக்களம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

இங்கு விதை வெங்காயம் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற போதும் இவற்றின் தரம் திருப்தியானதாக இல்லை யென விவசாயகளும், விவசாயத்திணைக்கள அதிகாரிகளும் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத்தெரியவருகிறது. [154]

## திருவிளையாடல் புராண படிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 'திருவிளையாடல் புராணம்' படிக்கப்பட்டு பயன் எடுத்துரைக்கப்பட்ட பூர்த்தி விழா அண்மையில் இடம்பெற்றது. (சு)

## இராசிபலன்

14-05-1992

வியாழக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 01)

திரயோதசி மு. இ. 11-34 வரை, சித்திரை ந இ. 11-45 வரை, இராகுகாலம் பகல் 1-23 முதல் 2-53 வரை, சு நேரம் காலை 7-23 முதல் 8-53 வரை, சித்தாமிர்தம் பிரதோச விரதம்.

மேஷம்: உல்லாசபயணம்: அதிர்ஷ்டம், குடும்ப உறவு.

இடபம்: நண்பர்களிடம் மனக்கசப்பு பிரச்சனை செலவு.

மிதுனம்: குழப்பமடைதல், காரியதாமதம், மனச்சுமை

கடகம்: உறவினர்சகாயம் திடீர் நன்மை, பணவரவு.

சிங்கம்: முயற்சி தாமதம், மருத்துவ செலவு, சோம்பல்.

கன்னி: புதிய மாற்றம், பெரியோர் ஆசி, தொழில்லாபம்.

துலாம்: தப்பபிப்பிராயம் கடன் தொல்லை அவதி.

விருச்சிகம்: காரிய அனுகூலம், பெண் ஆதரவு, மகிழ்ச்சி

தனுசு: காரணமற்ற செலவு, பிரச்சினைதீர்வு, பயணம்.

மகரம்: குடும்பமோதல், அதிகயோசனை, உடல்உபாதை

கும்பம்: மனக்கசப்பு, தொழில்தகராறு, வெறுப்பு

மீனம்: சுபகாரிய நிகழ்ச்சி, வரவேற்பு, திடீர்யோகம்.

— ஜோஸ்யர்.

## பனைவெல்லம்

# உற்பத்தி வாய்ப்பிருந்தும் சந்தைப்படுத்த முடியாத நிலை

[பண்டத்தரிப்பு]

வலிகாமம் மேற்கு பகுதியிலுள்ள தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் இம்முறை பதநீரிலிருந்து அதிகளவு பனை வெல்லத்தை உற்பத்திசெய்யக்கூடிய வாய்ப்பு இருந்தும் அவற்றை சந்தைப்படுத்துவதில் கஷ்டங்கள் எதிர்நோக்குவதாக அறியப்படுகின்றது.

பல சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம் விற்பனையாகாது தேங்கிக்கிடப்பதாகவும், இதனுல் இச்சங்கங்களில் பலத்த நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தினம் ஒன்றிற்கு 200கிலோ நிறையுள்ள பனம் வெல்லத்தை உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்புஇச்சங்கங்களில் ஒன்றிற்கு இருந்தும் இவற்றை விற்பனை செய்வதில் சிரமங்கள் ஏற்படுவதால் அவ்வாறு அதிகரித்த அளவுக்கு உற்பத்தி செய்ய முடியாதிருப்பதாக சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இதனுல் சங்க ஊழியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கமுடியாத இக்கட்டான நிலை உருவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (72)

# செய்திச்சுருக்கம்

(பண்டத்தரிப்பு)

மருந்துக் கலவையாளரின் முக்கிய பிரச்னைகள் குறித்து யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருடன் நேரடியாகச் சந்தித்துப்பேச்சு வார்த்தை நடத்துவதென்று அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். கிளை தீர்மானித்துள்ளது. (72)

### படிவங்கள் தட்டுப்பாடு

(மானிப்பாய்)

யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் படிவங்கள் முடிவடைந்துவிட்டன.

இதனுல் இதற்கு விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் இவ் விண்ணப்பப்படிவத்தை தேடி கிராமசேவை அலுவலரிடமும், ஆட்பதிவுத் திணைக்களத்திற்கும் தினமும் செல்வதைக் காணமுடிகிறது. (71)

### தொழுநோய் ஆய்வு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாநகர சபைப் பகுதியிலுள்ள நாவாந்துறையில் தொழுநோய் சம்பந்தமான ஆய்வு ஒன்று இம்மாதம் 24ம் திகதியன்று யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (72)

### இடமாற்றம்

(கொழும்புத்துறை)

வடக்கு-கிழக்கு மாகாண நிர்மாண அமைச்சின் யாழ். மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. மு. பரஞ்சோதி வன்னி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுளளார்.

உதவிப் பொறியியலாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். இந்திரகுமார் யாழ். மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளராக அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (154)

### மரவள்ளி விலை வீழ்ச்சி

(அரியாலை)

யாழ். சின்னக்கடை மரக்கறிச் சந்தையில் ஒரு கிலோ மரவள்ளிக் கிழங்கு 5 ரூபாவாக விற்கப்பட்டு வருகிறது. (59)

### கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்க யாழ். கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். நகரிலுள்ள சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சிய கட்டிட மேல்மாடியில் இம் மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. (72)

### நுளம்பு தொல்லை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் மலேரியா ஒழிப்புப் பிரிவினரின் பணி பல வருடகாலமாகச் செயலிழந்ததையடுத்து நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. [59]

### கட்டாக்காலி நாய்களை அகற்ற நடவடிக்கை

[சாவகச்சேரி]

சாவகச்சேரி நகராட்சி மன்றம் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்களை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் அகற்றியுள்ளது, இதற்கென சுமார் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான வண்டி ஒன்றையும் அண்மையில் கொள்வனவு செய்துள்ளது. (155]

### மன்னாருக்கு அம்புலன்ஸ் வண்டி

[மன்னார்]

யூனிசேவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகளில் ஒன்று மன்னார் மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. [59]

### ரதோற்சவம்

[யாழ்ப்பாணம்)

வட்டு மேற்கு சின்னக்கதிர்காம ஆலயரதோற்சவம் நாளை 15-ம் திகதியும் தீர்த்த உற்சவம் 16ம் திகதியும் நடைபெறும். (ரி)

### ஞாயிறு பஜனை 30 பேருக்கு பரிசு

[சரசாலை]

சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீசிதம்பர விநாயகர் ஆலயத்தில் பிரதி ஞாயிறு தோறும் தொடர்ச்சியாகப் பஜனை கூட்டுப் பிரார்த்தனையில கலந்துகொள்ளும் முப்பது பேருக்கு ஊக்குவிப்பு பரிசில்களை சரசாலை இந்து இளைஞர் மன்றம் எதிர்வரும் 19 ம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்க இருக்கிறது. (154)

### நூல் வெளியீட்டு விழா

(கொழும்புத்துறை)

ஒமந்தை இந்து மாமன்றம் அண்மையில் ''ஸ்ரீ கருட புராண வசனம்'' என்ற நூலை மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி ஆலயத்தில் அமரர் விஞசித்தம்பி ஆறுமுகத்தின் ஞாபகார்த்தமாக வெளியிட்டுள்ளது.

இவ்நூல் வெளியீட்டு விழாவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், ஆத்மஜோதி நா. முத்தையா ஆகியோர் கலந்துகொண்டனர். (154)

### இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவிலில் நடைபெற்றுவரும் லட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6 மணிக்கு ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

0 0 0

(அரியாலை)

யாழ். மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலைய மாதாந்தக் கூட்டம் இன்று 14ந்திகதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. மா. ஞானசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (59)

### உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் 2ம் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

சுன்னுகம் ஸ்கந்தா எதிர் அளவெட்டி விநாயகர். இப்போட்டி சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டு கழகத்தின் 1ம் வருட நிறைவையொட்டி நடாத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

காரைநகர் வி. கழகம்எதிர் ஜொலி ஸ்ரார்ஸ், ஞானகலா எதிர் நாவந்துறை கலைவாணி இப்போட்டிகள்யாழ். தொழில்நுட்பக்கல்லூரிமைதானத்தில் நடைபெறும்.

# சிறிமா பதவி விலகினால்

## கட்சித் தலைமைக்கு போட்டியிடுவேன்

### அனுரா கூறுகிறார்

[குருநாகல்]

''திருமதி சிறிமாவைக் காட்டி மக்களிடம் வாக்குக் கேட்ட காலம் மறைந்துவிட்டது. ஏதாவதுகாரணத்தினால் திருமதி சிறிமா தலைமைப் பதவியிலிருந்து விலகினால் தலைமைப்பதவிக்கு நான் போட்டியிடுவேன்''.

இவ்வாறு குருநாகலில் நடைபெற்ற கருத்தரங் கொன்றில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளர் திரு அனுரா பண்டாரநாயக்கா கூறினார்.

திருமதி சிறிமாவோவின் இடத்திற்கு திருமதி சந்திரிகா போட்டியிடக்கூடுமென்ற ஐயப்பாடு குறித்து பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரிடையே தலைமைப்பதவி குறித்து அண்மைக்காலமாக சர்ச்சை எழுந்து வருவது குறிப்பிடத்தக்கது. [கே]

### ராஜேஸ்கன்னா போட்டி

(புதுடில்லி)

புதுடில்லி லோக் சபா தொகுதி இடைத்தேர்தலுக்கு இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக திரைப்பட நடிகர் ராஜேஸ் கன்னா போட்டியிடவிருக்கிறார். [மா]

### தெற்கில் பலத்தமழை

(கொழும்பு)

கடந்த இரண்டு நாட்களாக தென்பகுதியில் பலத்த மழை பெய்துள்ளது.

இதனால் பல இடங்களில் வெள்ளமும் மண்சரிவும் ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தொண்டர் ஆசிரியர் பளையில் ஊர்வலம்

(பளை)

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்றுக்காலை பளை கோத்தணிப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் ஊர்வலமொன்றை நடாத்தினர்.

தர்மங்கேணி பாடசாலையில் ஆரம்பமான இவ்வூர்வலம் பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரை சென்றது.

அங்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிக்கும், கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கும் தனித்தனி மகஜர் கையளிக்கப்பட்டது. (155)

## வடக்கு-கிழக்கிற்கு விளையாட்டு அதிகாரிகள் 24 பேர் நியமனம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 24 விளையாட்டு அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான எழுத்து பரீட்சை செயல்முறைப் பரீட்சைகள் நடத்தி தெரிவுகள் இடம்பெற்றுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

வெகுவிரைவில் நியமனக் கடிதங்களும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## 18ம் திகதியும் விடுமுறையாக அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 18ம் திகதி வர்த்தக, வங்கிகள் விடுமுறை தினமாக அரசினால்பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

16ம் திகதி சனிக்கிழமை போயா விடுமுறை தினத்தினை முன்னிட்டு 15ம் திகதி வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ள வெசாக் விடுமுறை தினத்துக்குப் பதிலாக 18ம் திகதிவர்த்தகவங்கி விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## தீவகப் பகுதியில் இருப்போர் தொகை

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் பின்பு, தற்போது அங்கு வசிக்கும் பொது மக்களின் எண்ணிக்கையும், அங்கு கடமையாற்றும் அரச ஊழியர்களின் எண்ணிக்கையும் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் முழுவிபரங்களும் பின்வருமாறு:

ஊர்காவற்றுறையில் 74 ஆயிரம் மக்கள் முன்னர் வசித்தனர் இப்போது 466 பேரே உள்ளனர். புங்குடுதீவில்முன்பு 12 ஆயிரம் பேர், இப்போது 687 பேர். மண்டைதீவில் முன்னைய எண்ணிக்கை 3 ஆயிரம். இப்போது 40 பேர் உள்ளனர். காரைநகரில் முன்னர் 45 ஆயிரம் பேர். இப்போது 757 பேர். எழுவைதீவில் முன்னர் 575 பேர். இப்போது 43 பேர். அனலைதீவில் முன்னர் 3905 பேர். இப்போது 3263 பேர். நயினாதீவில் முன்னர் 5217 பேர். இப்போது 3217 பேர்.

மேற்படி தீவுப்பகுதி அனைத்திலும் மொத்தமாக 231 அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உள்ளனர். இ பகுதிகளில் 255 பென்சனியர்களும் உள்ளனர். (வி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Numbers B/10336/81

### பிரயாணிகள் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

01-05-92ம் திகதிக்கு முன்னர் நீங்கள் பெற்றுக் கொண்ட நிரந்தர அனுமதி அட்டைகள் யாவும் 31-05-92 ஆம் திகதி வரைக்குமே செல்லுபடியாகும். அதன் பின்னர் 01-06-92 ம் திகதி முதல் புதிய நடைமுறைக்கு உட்பட்ட நிரந்தர அனுமதியை பெற்றுள்ளவர்கள் மட்டும் எமது வவுனியா சோதனை நிலையத்தின் ஊடாக பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

### 'சாவி குற்றச்சாட்டு

(சென்னை)

பிரபல எழுத்தாளர் 'சாவி' தம்மைக்கைது செய்த செயல் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று கருத்து தெரிவித்துள்ளார்.

காவல்துறையினர் தம்மை கைதுசெய்து காற்று, குடிநீர் வசதி இல்லாது காவல்நிலைய அறை ஒன்றில் 2 மணிநேரம் வைத்திருந்ததாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (கே)

### வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விமானத்தாக்குதலில் 2 வீடுகள் முற்றாக சேதமடைந்தன. மருதங்கேணி வைத்திய சாலை வைத்தியர் விடுதியும் பலத்த சேதமடைந்தது.

பருத்தித்துறை – தாளையடி போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தட்டிவான் ஒன்றும் பலத்த சேதமடைந்தது. (56-155)

### இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சண்டே ஒப்ஸவர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

1985ம் ஆண்டு முதலே இந்தியா புலிகள் இயக்கத்தை திட்டமிட்டு பலவீனப்படுத்த முயன்று வருகிறது.

இலங்கைத் தமிழர்களின் நலன் இந்தியாவுக்கு முக்கியமல்ல என்றும் இந்தியாவின் சுயநலமே முக்கியம் என்று திரு. யோகி தெரிவித்துள்ளதாகவும் மேற்படி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (மா)

### இலங்கை அரசுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் எம். எம். ஜேக்கப் நாடாளுமன்ற மக்களவையில் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும், உளவுத் தலைவர் பொட்டு அம்மானையும் ஒப்படைக்கும்படி இலங்கை அரசிடம் கேட்டுக் கொள்ளப்படும் என்றும் சி. பி ஐ. நடத்திய விசாரணையில் ராஜீவ் கொலை சம்பந்தப்பட்ட விடயத்தில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் பிரதான குற்றவாளியாக இருப்பது தெரியவந்துள்ளது என்றார். –க

## தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு இடங்கள்

(யாழ்ப்பாணம்)

மீட்புநிதி கடன்பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான கடன் மீளளிப்பு 16-ம், 17-ம் திகதிகளில் பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படும்.

மானிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, காரைநகர்: பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 16-ம் திகதி காலை 9-00 மணி.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில், வேலணை: மங்கையற்கரசி மகா வித்தியாலயம் நல்லூர். 16-ம் திகதி பி. ப. 2-00 மணி.

கரவெட்டி, பருத்தித்துறை வட கிழக்கு: வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை 17-ம் திகதி காலை 9-00 மணி.

சாவகச்சேரிபச்சிலைப்பள்ளி: சாவகச்சேரி இந்துக் கல்லூரி 17-ம் திகதி பி. ப. 3-00 மணி.

## வங்கிக் குறைபாடுகளை நிவர்த்திக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகளில் நிலவிவரும் குறைபாடுகளை நிவர்த்திசெய்து தரும்படி வங்கி முகாமையாளர்கள் யாழ் அரச அதிபரிடம் வேண்டுகோள விடுத்துள்ளார்கள்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் முகாமையாளர்கள் நேற்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரைச் சந்தித்து மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்கள். (வி)

### புலிகளுக்கு ஆதரவான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடப்பட்டுள்ளது.

புலிகள் மீதான தடை குறித்து லோக்சபாவில் அமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் உரையாற்றும் போதே இக்கோரிக்கை விடப்பட்டது.

இதுகுறித்து விரைவில் முடிவு செய்யப்படுமெனவும் அமைச்சர் ஜேக்கப் அங்கு தெரிவித்தார். [சி-மா]

### தமிழக

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யும்படி உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவு விடயத்தில் தமது நிலைப்பாட்டை 8 மாநிலங்களின் சபாநாயகர்கள் ஆதரித்துள்ளதாக தமிழ்நாடு சபாநாயகர் திரு. சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

ஆந்திரா, கேரளா, பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா, குஜராத், அசாம், சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சபாநாயகர்கள இந்த விவகாரத்தில் தமக்கு ஆதரவளித்திருப்பதாக திரு. முத்தையா தெரிவித்தார். (க)

### ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரிஒருவர் தெரிவித்துள்ளார்.

புலிகள் போருக்கு தயார் என்றால் அதற்கு பதிலடி கொடுக்க தாம்தயார் என்றும் தெரிவித்தார்.

ஆனையிறவு இராணுவ முகாமை தாக்குவதற்கு மீண்டும் புலிகள் முயற்சித்து வருவதாகவும் தற்போதைய சூழ்நிலை அவர்களுக்கு சாதகமாகி வருவதாகவும் இராணுவத்திற்கு புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளதாம், (மா-சி)

### ஷெல் தாக்குதல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஷெல் தாக்குதலும் 50 கலிபர் தாக்குதலும் நடாத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. [க]

### கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை திறக்கப்படுமெனவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். [சி]

### குளங்களை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மேற்படி இணக்கம் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (வி)

### சமாதானக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பகிஷ்கரித்துள்ளது.

இந்த சமாதானக் குழு கடந்த வாரம் அமைக்கப்பட்டது. இதற்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டபோதும் இதனை முஸ்லிம் காங்கிரஸ் பகிஷ்கரித்துள்ளது.

முஸ்லிம் ஊர்காவல் படையின் தமிழர் விரோத நடவடிக்கைக்கும் ஜிகாத்தின் செயற்பாட்டிற்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டு வருவதும் தெரிந்ததே. (சி)

### துன்புறுத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கத்தோலிக்க மதகுருமார் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்படுதலும் துன்புறுத்தப்படுவதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்

### ஸ்கவுட்ஸ் ஏ. சுப்பிரமணியம்

ஸ்கவுட்ஸ் ஏ. சுப்பிரமணியம் காலமானார். இவர் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும், பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை முன்னாள் உடற்கல்வி விரிவுரையாளரும், வடமாநில சாரணர் ஆணையாளரும், பல்துறை விளையாட்டுக்களின் தீர்ப்பாளரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் திருநெல்வேலி சந்திக்கருகாமையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இன்று பி. ப. 3 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரிய-மாணவர்கள், விளையாட்டுத்துறையினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.
திருநெல்வேலி. (சி-6207)